

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
**Website: www.mntfreeias.com**

| Question Booklet No: |
|---|
| |

**Register Number:** | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

### IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
## 10 ஆம் வகுப்பு - பழைய புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. திருவாசகம் ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துருகும்" எனும் வரிகள் எதனுள் இடம்பெற்றுள்ளது?
   (A) திருவருட்பா
   (B) பழமொழி
   (C) நால்வர் நான்மணிமாலை
   (D) திருத்தொண்டர் புராணம்
   (E) விடை தெரியவில்லை

2. பொருத்துக
   a. குறிஞ்சி -- 1. காந்தள்
   b. முல்லை -- 2. தோன்றி
   c. நெய்தல் -- 3. தாழை
   d. பாலை -- 4. குரவம்
   (A) 1 2 3 4
   (B) 1 3 2 4
   (C) 2 3 4 1
   (D) 3 2 1 4
   (E) விடை தெரியவில்லை

3. Familiarity breeds contempt என்பதன் தமிழ்ப் பழமொழி
   (A) நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
   (B) பழகப் பழகப் பாலும் புளிக்கும்
   (C) நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
   (D) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
   (E) விடை தெரியவில்லை

4. இவற்றுள் தொடர்பு இல்லாதது: (பேச்சுக்கலை)
   (A) ரா.பி.சேதுப்பிள்ளை
   (B) சோமசுந்தர பாரதி
   (C) குன்றக்குடி அடிகளார்
   (D) வேங்கடசாமி நாட்டார்
   (E) விடை தெரியவில்லை

5. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a. சிலப்பதிகாரம் | -- | 1. | சீர்திருத்தக் காப்பியம் |
| b. மணிமேகலை | -- | 2. | சொற்போர் காப்பியம் |
| c. சீவக சிந்தாமணி | -- | 3. | குடிமக்கள் காப்பியம் |
| d. குண்டலகேசி | -- | 4. | வருணணைக் காப்பியம் |

(A) 3 1 4 2
(B) 3 2 4 1
(C) 3 1 2 4
(D) 3 4 2 1
(E) விடை தெரியவில்லை

6. திரு.வி.க. யாரை “நடமாடும் பல்கலைகழகம்” என அழைத்தார்?
(A) மனோன்மணியம் பெ.சுந்தரனார்
(B) ரா.பி.சேதுப்பிள்ளை
(C) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
(D) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
(E) விடை தெரியவில்லை

7. “அபயன்” எம்மன்னனை குறிக்கும் வேறுபெயர்?
(A) முதல் குலோத்துங்கச் சோழன்
(B) 2ஆம் குலோத்துங்கச் சோழன்
(C) இராஜேந்திர சோழன்
(D) இராசராச சோழன்
(E) விடை தெரியவில்லை

8. பொருத்தமான பழமொழியைக் கண்டறிக:
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்
(A) ஞாயிற்றை கைமறைப்பார் இல்
(B) முள்ளினால் முள்களையும் ஆறு
(C) பாம்பு அறியும் பாம்பின் கால்
(D) ஆற்று உணா வேண்டுவது இல்
(E) விடை தெரியவில்லை

9. “அடல்புனை நெடுவேல் ஆட் கொண்டதேவன்” எனும் வரிகள் இடம்பெற்ற நூல் எது?
(A) பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்
(B) புலவராற்றுப்படை
(C) கூத்தாற்றுப்படை
(D) நெஞ்சாற்றுப்படை
(E) விடை தெரியவில்லை

10. பிரித்து எழுதுக: விதிர்புற்றஞ்சி
   (A) விதிர்ப்பு + உற்று + றஞ்சி
   (B) விதிர்ப்பு + உற்று + அஞ்சி
   (C) விதிர்ப்பு + உற்று + வஞ்சி
   (D) விதிர்ப்பு + உற்ற + அஞ்சி
   (E) விடை தெரியவில்லை

11. “வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும்மே” எனும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் அதன் இயல் என்ன?
   (A) தொல்காப்பியம், உரியியல்
   (B) தொல்காப்பியம், புணரியல்
   (C) தொல்காப்பியம், மரபியல்
   (D) தொல்காப்பியம், எச்சவியல்
   (E) விடை தெரியவில்லை

12. தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி இந்திய அரசுக்கும், இந்திய பல்கலைக்கழகத்திற்கும் அனுப்பியவர்கள்?
   (A) சைவ சிந்தாந்த மாநாட்டினர்
   (B) மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை
   (C) கரந்தைத் தமிழ்ச்சங்கம்
   (D) மதுரைத் தமிழ்ச்சங்கம்
   (E) விடை தெரியவில்லை

13. தவறானதைக் கண்டறிக.
   1. புத்தரது ஆதிவேதம் என்னும் இதழை இருபத்தாறு காதைகளை கொண்ட பெருநூலாக எழுதியவர் காத்தவராயன்.
   2. இதற்கு சான்றாக பெருங்குறவஞ்சி, வீரசோழியம், நன்னூல் விளக்கம், தொல்காப்பியம் ஆகிய நூல்களை துணைநூல்களாக எடுத்து கொண்டார்.
   3. இவர் ஒரு பைசா தமிழன் எனும் இதழை வெளியிட்டார் அது 19.06.1907 முதல் சென்னை இராயப்பேட்டை இருந்து புதன்தோறும் வெளிவந்தது.
   4. இவர் தென்னிந்திய சமூகசீர்திருத்தங்களின் தந்தை குருவை போற்றிய குருமணி என்று அழைக்கப்படுகிறார்.
   (A) 1 மட்டும்
   (B) 1, 2, 3
   (C) 2 மட்டும்
   (D) 1, 3
   (E) விடை தெரியவில்லை

14. “நான்மாடக் கூடலில் நிற்கின்றேன். நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினை பெற்றுத் தமிழகத்தின் அறிவுக் கோட்டமாய்த் திகழ்ந்தது இம்மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்” என்று கூறியவர்?
(A) தென்னாட்டு பெர்னாட்ஷா
(B) தமிழ்நாட்டின் பெர்னாட்ஷா
(C) மூதறிஞர்
(D) பரிதிமாற்கலைஞர்
(E) விடை தெரியவில்லை

15. இவற்றில் எது வள்ளலார் கூறாத அறிவுரை எது?
1. தானம் கொடுப்போரை தடுத்துநிறுத்தாதே
2. பொருளை இச்சித்துப் பொய்சொல்லாதே
3. மனமொத்த நட்புக்கு வஞ்சகம்செய்யாதே
4. இறப்போருக்கு இல்லை என்று சொல்லாதே
(A) அனைத்தும் சரி
(B) 3 மட்டும்
(C) 4 மட்டும்
(D) 2 மட்டும்
(E) விடை தெரியவில்லை

16. “உறுமிடத்துதவா துவர் நிலம்” என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல், இவ்வரிகள் யாருடையது?
(A) புறநானூறு, கபிலர்
(B) புறம், பரணர்
(C) அகநானூறு, கபிலர்
(D) குறுந்தொகை, பரணர்
(E) விடை தெரியவில்லை

17. “நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்” எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூலின் ஆசிரியர் யார்?
(A) பெருங்குன்றூர் கிழார்
(B) கடியலூர் உருத்திரங் கண்ணனார்
(C) நல்லூர் நத்தத்தனார்
(D) மாங்குடி மருதனார்
(E) விடை தெரியவில்லை

18. கூற்றை கவனி.

1. தமிழ்மொழியானது ஆயிரத்தொன்னூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயரையும் தந்துள்ளது.
2. தமிழ் இலக்கியம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட்.
3. பாரதியை நினைத்திட்டாலும் சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென்று ஏறும். இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்ப உண்டாகும் - என்றவர் நாமக்கல் கவிஞர்.
4. பாரதியார் ஓர் அவதார புருஷர் இவர் நூலை திராவிட வேதமாகக் கொள்ள வேண்டும் என்றவர் பரலி சு. நெல்லையப்பர்.

(A) அனைத்தும் சரி
(B) 1, 3, 4 சரி 2 தவறு
(C) 1, 2, 3 தவறு 4 சரி
(D) 1 தவறு 2, 3, 4 சரி
(E) விடை தெரியவில்லை

19. "ஆயிடை அணங்கின் கற்பும்ஐய நின்னருளும் செய்ய தூய நல்லறனும் என்றிங்கினையன தொடர்ந்து காப்ப" இவ்வரிகளில் சீதையை அழியாமல் காப்பாற்றியவை எவை?

(A) அன்பும் பண்பும்
(B) அறனும் மறனும்
(C) அறிவும் ஆற்றலும்
(D) கற்பும் அருளும்
(E) விடை தெரியவில்லை

20. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" என்று பாடியவர்?

(A) பாண்டியன் நெடுஞ்செழியன்
(B) அதிவீரராம பாண்டியன்
(C) வரகுணப் பாண்டியன்
(D) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
(E) விடை தெரியவில்லை

21. தவறானதை தேர்ந்தெடுக்காமல் சரியானதை தேர்ந்தெடு
   1. சமரச சுத்த சன்மார்க்க சங்கம் - 1865
   2. சத்திய தரும சாலை – 1867
   3. சத்திய ஞான சபை – 1872
   4. வள்ளலார் கல்வி கற்க வேலாயுத முதலியாரிடம் அவர் தாய் அனுப்பி வைத்தார்

   (A) 1, 2, 3
   (B) 4 மட்டும்
   (C) 2 மட்டும்
   (D) 1, 3
   (E) விடை தெரியவில்லை

22. “நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்” எனும் பாடல் அப்பர் எப்போது பாடினார்?
   (A) நீற்றறையில் இட்ட போது
   (B) படை அனுப்பியபோது
   (C) கல்லில் கட்டி கடலில் வீசியபோது
   (D) முதல் பதிகம் பாடிய போது
   (E) விடை தெரியவில்லை

23. “நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று தன் செய்வினைப் பயனே” என்று புகழ்பெற்ற வரிகளை எழுதியவர் யார்?
   (A) ஒக்கூர் மாசாத்தியார்
   (B) மிளைகிழான் நல்வேட்டனார்
   (C) வெள்ளிவீதியார்
   (D) கண்ணகனார்
   (E) விடை தெரியவில்லை

24. “திருக்குறள் ஒரு வகுப்பார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ ஒரு நிறத்தார்க்கோ ஒரு மொழியார்க்கோ, ஒரு நாட்டார்க்கோ உரியதன்று. அது மன்பதைக்கு உலகுக்குப் பொது” என்று கூறியவர் யார்?
   (A) அண்ணாவின் முன்னோடி
   (B) எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எனக் கூறியவர்
   (C) உள்ளொளியின் ஆசிரியர்
   (D) மேற்கூறிய அனைத்தும்
   (E) விடை தெரியவில்லை

25. "வரலாற்று அறிஞர் பலரும் கிறிஸ்துவ ஊழித் தொடக்கத்துக்கு முன்பே மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்திருக்க வேண்டும் என்று நவில்கின்றனர். தமிழ்ச்சங்கம் இருந்தது என்ற மரபுச் செய்தி இடைவிடாது இருந்து வருகிறது இந்தியாவில் இத்தகைய மரபுச் செய்தி வேறெங்குமில்லை" என்று கூறியவர் யார்?
(A) மறைமலை அடிகள்
(B) தனி நாயகம் அடிகள்
(C) தேவநேய பாவாணர்
(D) பரிதிமாற் கலைஞர்
(E) விடை தெரியவில்லை

26. நந்தி கலம்பகம் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?
(A) இந்நூல் தெள்ளாறு எறிந்த முதலாம் நந்திவர்மனை பாட்டுடைத் தலைவராகக் கொண்டது
(B) "நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்பது சிவஞான சுவாமிகளின் சோமேசர் முதுமொழி வெண்பா பாடல்
(C) நந்தி கலம்பகம் 1947-ல் உ.வே.சா பதிப்பித்து வெளியிட்டார்
(D) புயவகுப்பு, களி, குரல் என்பன கலம்பகத்தின் உறுப்புகள்
(E) விடை தெரியவில்லை

27. கூற்றை கவனி.
1. சாலை இளந்திரையனின் மனைவியே சாலினி இளந்திரையன்.
2. சாலை இளந்திரையன் "தமிழ்ப்பழமொழியும் சமுதாயமும்" என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார்.
3. சாலை இளந்திரையன் எழுதிய நூல்கள்: புரட்சி முழக்கம், உரைவீச்சு.
4. சாலினி இளந்திரையன் "உரைவீச்சு" என்ற புது இலக்கிய வடிவத்தையாக்க பெருமுயற்சி செய்தவர்.
(A) அனைத்தும் சரி
(B) 1, 2, 3 சரி 4 தவறு
(C) 1, 2 தவறு 3, 4 சரி
(D) அனைத்தும் தவறு
(E) விடை தெரியவில்லை

28. சீறாப்புராணத்துடன் சரியாக தொடர்பு உள்ளதை கண்டறிக
   (A) உமறுப்புலவர் இஸ்லாமிய கபிலர் என அழைக்கப்படுகிறார்
   (B) உமறுப்புலவர் 14ம் வயதில் வாலை வாரிது என்பவரை வாதிட்டு வென்றார்
   (C) நுபுவத்துக் காண்டம் "செலவியற் காண்டம்" என அழைக்கப்படுகிறது
   (D) சின்னச்சீறா 2145 பாடல்களை கொண்டது
   (E) விடை தெரியவில்லை

29. சரியானதை தேர்ந்தெடு:
   1. MGR 1917 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் பதினான்காம் நாள் பிறந்தார்.
   2. கோபால மேனன் - சத்யபாமா இணையருக்கு ஐந்தாவது மகனாக பிறந்தார்.
   3. கடின உழைப்பே ஒரு நாட்டுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும் என்று கூறினார்.
   4. இவர் 1963-ல் சென்னை சட்டமன்ற பேரவை உறுப்பினரானார்.
   (A) 1, 2
   (B) 2, 3
   (C) 3, 4
   (D) 1, 2, 3
   (E) விடை தெரியவில்லை

30. "பொருளல் லவரைப்பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்" - இக்குறளில் பயின்று வரும் அணி?
   (A) உவமை அணி
   (B) எடுத்துக்காட்டு உவமை அணி
   (C) சொல்பின்வரு நிலையணி
   (D) இல்பொருள் உவமை அணி
   (E) விடை தெரியவில்லை

31. பொருத்துக.
   a. கல் மேல் எழுத்துப் போல — 1. உறுதி
   b. ஊமை கண்ட கனவு போல — 2. இயலாமை
   c. ஊசியும் நூலும் போல — 3. நெருக்கம்
   d. மதுவுண்ட குரங்கு போல — 4. மயக்கம்
   (A) 1 2 4 3
   (B) 1 2 3 4
   (C) 3 2 1 4
   (D) 2 3 1 4
   (E) விடை தெரியவில்லை

32. உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தை பொறுத்தல், இடையறா நிலையானபக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தை கவர்கின்றவர் யாரும் இல்லை – என்று கூறியவர் யார்.
(A) கால்டுவெல்
(B) எமினோ
(C) ஈராஸ் பாதிரியார்
(D) ஜி.யு.போப்
(E) விடை தெரியவில்லை

33. பொருத்துக.
a. மடக்கொடி - அன்மொழித்தொகை
b. தடக்கை - உரிச்சொற்றொடர்
c. அவ்வூர் - சேய்மைச்சுட்டு
d. என்பதி - ஆறாம் வேற்றுமைத்தொகை
(A) 3 4 2 1
(B) 4 3 2 1
(C) 2 3 4 1
(D) 1 2 3 4
(E) விடை தெரியவில்லை

34. பொருத்துக.
a. வினையே ஆடவர்க்குயிர் - 1. தாராபாரதி
b. முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை - 2. குறுந்தொகை
c. உடம்பை வளர்த்தேன்: உயிர் வளர்த்தேனே - 3. தொல்காப்பியர்
d. விரல்கள் பத்தும் மூலதனம் - 4. திருமூலர்
(A) 2 3 4 1
(B) 1 4 3 2
(C) 3 4 2 1
(D) 1 2 3 4
(E) விடை தெரியவில்லை

35. பொருத்துக.
a. ஆற்றுதல் என்பது – 1. பாடுஅறிந்து ஒழுகுதல்
b. போற்றுதல் என்பது – 2. அலந்தவர்க்கு உதவுதல்
c. பண்பெனப் படுவது – 3. புணர்ந்தாரப் பிரியாமை
d. அன்பெனப் படுவது – 4. தன்கிளை செறாஅமை
(A) 1 2 3 4
(B) 2 3 1 4
(C) 4 3 2 1
(D) 1 4 3 2
(E) விடை தெரியவில்லை

36. பொருத்துக.

a. ஆறு - 1.நெருப்பு
b. அடவி - 2.இறைச்சி
c. கனல் - 3.காடு
d. புலால் - 4.வழி

(A) 1 2 3 4
(B) 4 3 1 2
(C) 3 1 4 2
(D) 1 3 2 4
(E) விடை தெரியவில்லை

37. திருநாவுக்கரசர் பற்றி கீழ்க்காணும் கூற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.

(A) திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தார். பெற்றோர் புகழனார், மாதினியார். இவரது தமக்கையார் திலகவதியார்.
(B) திருநாவுக்கரசர் மகன்மை நெறியை சார்ந்தவர்.
(C) தாண்டகம் பாடுவதில் வல்லவர். இவர் தாண்டக வேந்தர் என்றழைக்கப்படுகிறார்.
(D) இவரது காலம் கி.பி. 7ம் நூற்றாண்டு.
(E) விடை தெரியவில்லை

38. பொருந்தாததைத் தேர்ந்தெடு.

1. தேசம் - இடவாகு பெயர்
2. அறிந்து - வினையெச்சம்
3. கரகமலம் - உருவகம்
4. பொழிந்திழிய - வினையெச்சம்

(A) 1, 3
(B) 2, 1
(C) 4
(D) அனைத்தும் சரி
(E) விடை தெரியவில்லை

39. சேக்கிழார் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(A) காஞ்சிபுரத்திலுள்ள குன்றத்தூரில் பிறந்தவர்
(B) இயற்பெயர் அருண்மொழிவர்மன்
(C) அநாயச்சோழனிடம் தலைமை அமைச்சராய் திகழ்ந்தவர்
(D) உத்தமச்சோழப்பல்லவன் என்னும் பட்டம் பெற்றவர். இவரை தெய்வச் சேக்கிழார் என்னும் தொண்டசீர் பரவுவார் என்னும் போற்றுவர். இவர் காலம் கி.பி.12ம் நூற்றாண்டு.
(E) விடை தெரியவில்லை

40. பொருத்துக.

a. அறிவினா – 1. ஆசிரியர் மாணவனிடம் வினவுவது
b. அறியாவினா – 2. மாணவன் ஆசிரியரிடம் வினவுவது
c. கொடைவினா – 3. முருகா சாப்பிட்டாயா?
d. ஏவல் வினா – 4. மாணவர்களே உங்களுக்கு சீருடை இல்லையோ?

(A) 1 2 3 4
(B) 1 2 4 3
(C) 2 1 3 4
(D) 4 3 2 1
(E) விடை தெரியவில்லை

41. பிறமொழிச் சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க.

(A) ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
(B) இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்
(C) இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது
(D) நான் இந்தக் கல்லூரியின் பழைய மாணவன்
(E) விடை தெரியவில்லை

42. எந்த வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் அரைவயிற்று கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினராக நான் பேசுகிறேன் என்று கூறினார்

(A) முதலாம் வட்டமேசை மாநாடு – 1930
(B) இரண்டாம் வட்டமேசை மாநாடு – 1931
(C) மூன்றாம் வட்டமேசை மாநாடு – 1932
(D) நான்காம் வட்டமேசை மாநாடு – 1933
(E) விடை தெரியவில்லை

43. கீழ்க்காணும் கூற்றுகளில் வினைமுற்றில் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடு.

(A) தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்கள் வினைமுற்றுகள் என்பர்.
(B) எழுவாய்க்கும் பயனிலையாய் அமையும் முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும்.
(C) திணை, பால், எண், இடங்களைக் காட்டும்.
(D) செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையும் தெரிவித்துக் காலத்தை குறிப்பால் உணர்த்தும்.
(E) விடை தெரியவில்லை

44. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும் - இக்குறளில் அடுத்த அடியைக் கண்டுபிடி.
(A) எய்துவர் எய்தாப் பழி
(B) ஒழுக்கம் இலான் கண் உயர்வு
(C) கல்லார் அறிவிலா தார்
(D) காலம் அறிந்து செயின்
(E) விடை தெரியவில்லை

45. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த | - | 1. பெருங்கதை |
| b. அந்தக் கேணியும் எந்திரக் கிணறும் | - | 2. திருவாசகம் |
| c. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் | - | 3. பதிற்றுப்பத்து |
| d. புல்லாகிப் பூடாய் | - | 4. திருமந்திரம் |

(A) 4 3 2 1
(B) 3 1 4 2
(C) 4 1 3 2
(D) 3 2 4 1
(E) விடை தெரியவில்லை

46. பாண்டிய நாட்டின் சிறந்த நதியாகிய வைகையை புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி என்றும், பொய்யாக் குலக்கொடி என்றும் புகழ்ந்துரைத்தவர் யார்.
(A) இளங்கோவடிகள்
(B) பூதஞ்சேத்தனார்
(C) சீத்தலைச் சாத்தனார்
(D) இரா.பி.சேதுப்பிள்ளை
(E) விடை தெரியவில்லை

47. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இருநூல்கள் யாவை.
(A) திருக்குறள், நன்னூல்
(B) திரிகடுகம், ஏலாதி
(C) நற்றிணை, அகநானூறு
(D) தொல்காப்பியம், அகத்தியம்
(E) விடை தெரியவில்லை

48. தமிழைச் செம்மொழியாக அறிவித்தல் வேண்டும் என்ற முயற்சி ----- தொடங்கி ----- வரை தொடர்ந்தது.
(A) 1901 – 2004
(B) 1902 – 2004
(C) 1918 – 2004
(D) 1922 – 2004
(E) விடை தெரியவில்லை

49. பரிதிமாற்கலைஞருக்கு எந்த பல்கலைகழகம் பேராசிரியர் பணி வழங்க முன்வந்தது.

(A) விசுவ பாரதி பல்கலைக்கழகம்

(B) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

(C) ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம்

(D) எல்பின்ஸ்டன் பல்கலைக்கழகம்

(E) விடை தெரியவில்லை

50. சந்திப் பிழையற்ற தொடர் எது.

(A) கயிறுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

(B) கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

(C) கயிறுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

(D) கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

(E) விடை தெரியவில்லை

51. இளங்கோவடிகள் பற்றி கீழ்க்காணும் கூற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.

(A) இளங்கோவடிகள் சேர மரபினர் ஆவார்

(B) இளங்கோவடிகள் இளமையிலே துறவு பூண்டு குணவாயிற்கு கோட்டத்தில் தங்கினார்.

(C) இளங்கோவடிகள் அரசியல் வேறுபாடு கருதாதவர் சமய வேறுபாடற்ற துறவி ஆவார்

(D) சேரன் செங்குட்டுவன் இவரது தம்பியாவார்

(E) விடை தெரியவில்லை

52. சொற்றொடர ஒழுங்குபடுத்துக.

(A) உள்ளூர்ப் பயன்மரம் பழுத்ததைப் பபோன்று

(B) உள்ளூர்ப் பழத்ததைப் போன்ற பயன்மரம்

(C) பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததைப் போன்று

(D) பயன்மரம் போன்று உள்ளூர்ப் பழுத்ததை

(E) விடை தெரியவில்லை

53. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
   (A) ஆண்களுக்கு நிகராக பெண்களும் எல்லா துறைகளிலம் பணிபுரிந்து வருகிறார்கள்
   (B) ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிப்புரிந்து வருகிறார்கள்
   (C) ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்
   (D) ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் எல்லா துறைகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்
   (E) விடை தெரியவில்லை

54. பிறமொழிப் சொற்களற்ற வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
   (A) வேலன் சுயதொழிலில் அதிக வருவாய் ஈட்டினான்.
   (B) அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
   (C) அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்.
   (D) அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
   (E) விடை தெரியவில்லை

55. கீழ்க்காணும் கூற்றுகளில் வெண்பாவின் பொது இலக்கணம் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
   (A) ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்
   (B) இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்), வெண்சீர் (காய்ச்சீர்) வராது, பிறசீர்கள் வரும்.
   (C) இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்). வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும், பிறத்தளைகள் வாரா.
   (D) ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்று கொண்டு முடியும்.
   (E) விடை தெரியவில்லை

56. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | செறு | - 1. | விதை |
| b. | வித்து | - 2. | வயல் |
| c. | வட்டி | - 3. | புதுவருவாய் |
| d. | யாணர் | - 4. | பனையோலைப்பெட்டி |

   (A) 1 2 3 4
   (B) 2 1 3 4
   (C) 2 1 3 4
   (D) 4 3 2 1
   (E) விடை தெரியவில்லை

57. பொருத்துக.

a. வெளிப்படைச் சொற்கள் - 1. சோறு உண்டான்
b. இனங்குறித்தல் - 2. கல், மண்
c. குறிப்புச்சொல் - 3. அன்றே அன்றே
d. அடுக்குத்தொடர் - 4. மாடு பால் கறந்தது

(A) 1 2 3 4
(B) 2 1 4 3
(C) 3 4 1 2
(D) 4 3 1 2
(E) விடை தெரியவில்லை

58. கீழ்க்காணும் கூற்றில் அம்பேத்கர் கூறாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(A) செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம், உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தன்மை
(B) கற்பித்தல் அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும். விருப்பு வெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல் வேண்டும்.
(C) சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாhர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது.
(D) தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளர வேண்டும்.
(E) விடை தெரியவில்லை

59. பொருத்துக.

1. ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு முடிவது – கலவைத்தொடர்
2. ஓர் எழுவாய் பல பயனிலைகளை கொண்டு முடிவது – தொடர்நிலைத்தொடர்
3. ஒரு தனிச் சொற்றொடர் ஒன்றுக்கு மேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது – தனிநிலைத்தொடர்
4. எழுவாய் செய்யும் வினையை கொண்டு முடியும் தொடர் - செய்வினைத் தொடர்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 1 4 3 2
(D) 3 2 1 4
(E) விடை தெரியவில்லை

60. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான ஒன்றைத் தேர்ந்தெடு.

(A) பெயரெச்சம் - காலம் காட்டும்

(B) குறிப்புப் பெயரச்சம் - காலம் காட்டும்

(C) வினையெச்சம் - காலம் காட்டும்

(D) குறிப்பு வினையெச்சம் - காலத்தைக் காட்டாது

(E) விடை தெரியவில்லை

61. அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர், மிகவும் ஆர்வத்துடனும் விரைந்து தன்னந்தனியாகச் செயல்பட்டவர். தமக்கு கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர் - என்று கூறியவர் யார்.

(A) நேரு

(B) பெரியார்

(C) இராசேந்திரபிரசாத்

(D) ராஜாஜி

(E) விடை தெரியவில்லை

62. பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுக.

(A) செவி புக - உவமைத்தொகை

(B) வால் குழைத்து - 2ம் வேற்றுமைத்தொகை

(C) கொலைப்புலி - 3ம் வேற்றுமைத்தொகை

(D) பூதரப்புயம் - 7ம் வேற்றுமைத்தொகை

(E) விடை தெரியவில்லை

63. கீழ்க்காணும் கூற்றில் மாணிக்கவாசகரை பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(A) மதுரை மாவட்டத்தில் உள்ள திருவாதவூரில் பிறந்தார்.

(B) திருப்பொருந்துறை இறைவன் அருளால் ஆட்கொள்ளப்பெற்றவர்.

(C) பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தலைமையமைச்சராக பணியாற்றியவர்.

(D) இவர் எழுப்பியகோவில் தற்பொழுது ஆவுடையார் கோவில் என வழங்கப்படும் திருப்பெருந்துறையில் (புதுக்கோட்டை) உள்ளது.

(E) விடை தெரியவில்லை

64. கொளல் இலக்கணக்குறிப்பு தருக.

(A) அல்ஈற்று வியங்கோள் வினைமுற்று

(B) தொழிற்பெயர்

(C) அல்ஈற்று தொழிற்பெயர்

(D) வியங்கோள் வினைமுற்று

(E) விடை தெரியவில்லை

65. வயலில் ஆடுகள் மேய்ந்தில. இது எவ்வகையான தொடர்?
(A) தன்வினைத்தொடர்
(B) உடன்பாட்டுத்தொடர்
(C) எதிர்மறைத்தொடர்
(D) பொருள் மாறா எதிர்மறைத்தொடர்
(E) விடை தெரியவில்லை

66. கீழ்க்காணும் கூற்றுகளில் சிலப்பதிகாரத்தைப் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
(A) சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம், கண்ணகியின் சிலம்பால் விளைந்த கதையை முதன்மையாகக் கொண்டது ஆதலின் செந்தமிழ்க் காப்பியம்
(B) சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழக் காப்பியம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் முப்பெரும் பிரிவுகளை உடையது.
(C) புகார்க்காண்டம் பதின்மூன்று காதைகளையும், மதுரைக்காண்டம் பத்து காதைகளையும், வஞ்சிக்காண்டம் ஏழு காதைகளையும் கொண்டுள்ளது.
(D) சிலப்பதிகாரம் முதற்காப்பியம், முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக்காப்பியம், நாடகக்காப்பியம் என புகழப்படுகிறது.
(E) விடை தெரியவில்லை

67. கீழ்க்காணும் கூற்றுகளிலே வினை மரபுச் சொற்களில் தவறானவற்றைத் தேர்ந்தெடு.
(A) எங்கள் பள்ளிக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது.
(B) பாரதியார் செய்யுளைப் பாடினார்
(C) வேடன் எய்த அம்பு யானையை வீழ்த்தியது
(D) அந்தச் சிற்பம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டது.
(E) விடை தெரியவில்லை

68. கீழ்க்காணும் கூற்றுகளில் குலசேகராழ்வார் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு
(A) இவர் கேரள மாநிலத்தில் திருவஞ்சைக்களத்தில் பிறந்தவர்
(B) இவர் குலசேகரப்பெருமாள் என அழைக்கப்பட்டார். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர்
(C) குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழியை வடமொழியிலும் முகுந்தமாலையை தமிழ்மொழியிலும் எழுதியுள்ளார்.
(D) திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியதால், அதற்கு குலசேகரன் வீதி என்னும் பெயர் இன்றும் வழங்கி வருகிறது.
(E) விடை தெரியவில்லை

69. கலித்தொகையைப் பற்றி கீழ்க்காணும் கூற்றில் தவறான கூற்றைத் தேர்ந்தெடு
(A) கலிப்பாக்களால் அமைந்த நூல் இசையோடு பாடுவதற்கேற்ற நூல்
(B) கலித்தொகையில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து 150 பாடல்கள் உள்ளது.
(C) நெய்தற்கலியை பாடியவர் நல்லந்துவனார். இவர் நெய்தற்கலியில் 29 பாக்கள் பாடியுள்ளார்.
(D) கலித்தொகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் 5 பெரும் பிரிவுகளை உடையது.
(E) விடை தெரியவில்லை

70. கீழ்க்காண்பவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு.
(A) இருவிழி - இரண்டு + விழி
(B) வெள்ளையிறு - வெண்மை + எயிறு
(C) கரிக்கோடு - கருமை + கோடு
(D) மாதிரத்துறை - மாதிரத்து+ உறை
(E) விடை தெரியவில்லை

71. பொருத்துக. நிலமும் - விலங்குகளும்
a. குறிஞ்சி - முயல், மான்
b. முல்லை - புலி, கரடி
c. மருதம் - முதலை, சுறா
d. நெய்தல் - எருமை, நீர்நாய்
(A) 1 2 3 4
(B) 2 1 4 3
(C) 3 4 2 1
(D) 4 1 3 2
(E) விடை தெரியவில்லை

72. பொருத்துக.
a. பெற்றியார் - 1. பண்புப்பெயர்
b. பெறாஅமை - 2. வினையாலணையும் பெயர்
c. வன்மை - 3. குறிப்பு வினைமுற்று
d. இல்லை - 4. செய்யுளிசை அளபெடை
(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 3 4 2 1
(D) 2 4 1 3
(E) விடை தெரியவில்லை

73. கீழ்க்காணும் கூற்றில் வல்லினம் மிகு இடங்களில் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடு.
(A) நிலைமொழி உயிரீற்றுச் சொல்லின் பின் வல்லினம் மிகும்.
(B) இரண்டாம் வேற்றுமை விரியின் பின் வல்லினம் மிகும்.
(C) நான்காம் வேற்றுமை விரியின் பின் வல்லினம்.
(D) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
(E) விடை தெரியவில்லை

74. பண்டைக்காலத்து வாணிகப் பொருள்கள் துறைமுக நகரங்களிலிருந்த ஏற்றுமதியின் என்று கூறும் நூல்கள் யாவை?
(A) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை
(B) சிறுபாணாற்றுப்படை, புறநானூறு
(C) மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை
(D) பரிபாடல், பட்டினப்பாலை
(E) விடை தெரியவில்லை

75. பொருத்துக.
a. Dubbing - 1. ஒலிச்சேர்க்கை
b. Microphone - 2. நுண்ணொலி பெருக்கி
c. Camera - 3. படப்பிடிப்பு கருவி
d. Director - 4. இயக்குநர்
(A) 4 3 2 1
(B) 3 2 4 1
(C) 1 2 3 4
(D) 2 1 4 3
(E) விடை தெரியவில்லை

76. பொருத்துக.
a. மடைதிறந்த வெள்ளம் போல — 1. தெளிவு
b. மலரும் மணமும் போல — 2. விரைவு
c. கீரியும் பாம்பும் போல — 3. ஒற்றுமை
d. உள்ளங்கை நெல்லிக்கனி போல — 4. பகை
(A) 1 2 3 4
(B) 2 3 1 4
(C) 2 3 4 1
(D) 4 1 2 3
(E) விடை தெரியவில்லை

77. கீழ்க்காணும் கூற்றில் அடுக்குத்தொடர் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
(A) சொற்கள் தனித்தனியே நிற்கும்
(B) இரண்டு, மூன்று, நான்குமுறை அடுக்கி வரும்
(C) பிரித்தால் பொருள் தரும்
(D) இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும்
(E) விடை தெரியவில்லை

78. கீழ்க்காணும் கூற்றில் அம்பேத்கர் கூறாத ஒன்றைத் தேர்ந்தெடு.
(A) ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதாரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.
(B) சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம், சுதந்திரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை
(C) உழைத்துப் பெறு உரிய நேரத்தில் பெறு முயற்சி செய்து பெறு
(D) எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ அங்கே மனிதப் பண்பு மறைந்து விடுகிறது.
(E) விடை தெரியவில்லை

79. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. அவன் உழவன் | - | 1. தெரிநிலை வினைமுற்று |
| b. எழிலன் உழுதான் | - | 2. குறிப்பு வினைமுற்று |
| c. உண்ட இளங்கோவன் | - | 3. குறிப்பு பெயரெச்சம் |
| d. நல்ல பையன் | - | 4. தெரிநிலைப் பெயரெச்சம் |

(A) 1 2 3 4
(B) 2 1 4 3
(C) 1 4 3 2
(D) 4 3 2 1
(E) விடை தெரியவில்லை

80. கீழ்க்காணும் கூற்றில் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு. அயற்கூற்று
(A) அயற்கூற்றில் மேற்கோள் குறிகள் வராது
(B) தன்மை, முன்னிலை பெயர்கள் படர்க்கைப் பெயர்களாக மாறும்
(C) சுட்டுப்பெயர்கள் அது, அவை, அங்கே என மாறும்
(D) நேற்று, இன்று, நாளை எனக் காலப்பெயர்களும் மாறும்
(E) விடை தெரியவில்லை

81. பொருத்துக.

a. அறிவெனப்படுவது - 1. கூறியது மறாஅமை
b. செறிவெனப்படுவது - 2. பேதையார் சொல்நோன்றல்
c. முறையெனப்படுவது - 3. போற்றோரைப் பொறுத்தல்
d. பொறையெனப்படுவது - 4. கண்ணோடாது உயிர்வௌவல்

(A) 1 4 3 2
(B) 3 4 1 2
(C) 2 1 4 3
(D) 1 3 4 2
(E) விடை தெரியவில்லை

82. பொருத்துக.

a. மயில் - 1. கரையும்
b. கூகை - 2. குழறும்
c. யானை - 3. அகவும்
d. காகம் - 4. பிளிறும்

(A) 2 3 4 1
(B) 3 4 2 1
(C) 3 2 4 1
(D) 1 4 3 2
(E) விடை தெரியவில்லை

மனித நேயம் வளர்ப்போம் • மானுடம் மீட்போம் • சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை

83. உமறுப்புலவர் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

(A) சீறாப்புராணத்தினை இயற்றியவர் உமறுப்புலவர். இவர் எட்டயபுரம் கடிகை முத்துப்புலவரின் மாணவர்.
(B) அப்துல்காதிர் மரைக்காயர் என்ற வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளின் வண்ணமே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை இயற்றினார்.
(C) அவருக்குப் பின் அபுல்காசிம் என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணத்தை நிறைவுற்றது.
(D) உமறுப்புலவர் 80 பாக்களால் ஆகிய முதுமொழிமாலை என்னும் நூலைப் படைத்தார். இவர் காலம் 18ம் நூற்றாண்டு.
(E) விடை தெரியவில்லை

84. பொருத்துக.

a. குறிஞ்சி - 1. காடும் காடு சார்ந்த இடமும்
b. முல்லை - 2. வயலும் வயல் சார்ந்த இடமும்
c. மருதம் - 3. கடலும் கடல் சாரந்த இடமும்
d. நெய்தல் - 4. மலையும் மலை சார்ந்த இடமும்

(A) 1 3 4 2
(B) 4 1 2 3
(C) 1 4 3 2
(D) 4 2 1 3
(E) விடை தெரியவில்லை

85. கீழ்க்காணும் கூற்றில் வல்லினம் மிகா இடங்களில் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடு.

(A) வினைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது
(B) உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது
(C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது
(D) எழுவாய்த் தொடரில் வரும் வல்லினம் மிகாது.
(E) விடை தெரியவில்லை

86. வயலின் வரப்புகளாக தமிழ்விடு தூதில் குறிப்பிடபடுவன யாவை.

(A) துறை, தாழிசை, விருத்தம்
(B) அறம், பொருள், இன்பம், வீடு
(C) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
(D) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
(E) விடை தெரியவில்லை

87. பொருத்துக.

a. முதலைக்கண்ணீர் - 1. பயனின்றி இருத்தல்
b. பஞ்சாயப் பறத்தல் - 2. மிகுதியாகப் பேசுதல்
c. கொட்டியளத்தல் - 3. பொய் அழுகை
d. குட்டிச்சுவர் - 4. அலைந்து திரிதல்

(A) 3 2 1 4
(B) 3 4 2 1
(C) 2 3 4 1
(D) 2 4 1 3
(E) விடை தெரியவில்லை

88. பொருத்துக.

a. அறிவினா - 1. வருவாயா? ஏனில் வாரேன் என்பது

b. ஏவல் விடை - 2. உண்டாயா? ஏனில் வயிறுவலிக்கும் என்பது

c. மறைவிடை - 3. இதனைச் செய்வாயா? ஏனில் நீயே செய் என்பது

d. உறுவதுகூறல் - 4. இதன் பொருள் யாது? ஏன ஆசிரியர் மாணவரிடம் கேட்பது

(A) 1 2 3 4

(B) 2 1 3 4

(C) 4 1 2 3

(D) 4 3 1 2

(E) விடை தெரியவில்லை

89. பொருத்துக.

a. செயப்பாட்டு வினைத்தொடர் - 1. செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது

b. தன்வினைத் தொடர் - 2. எழுவாய், தானே செய்யும் தொழிலை உணர்த்துவது

c. பிறவினைத்தொடர் - 3. எழுவாய் ஒரு செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பது

d. உடன்பாட்டுத் தொடர் - 4. செயப்படுபொருள் வினைச்சொல்லைக் கொண்டு முடிவது

(A) 1 2 3 4

(B) 4 2 3 1

(C) 2 1 3 4

(D) 3 4 2 1

(E) விடை தெரியவில்லை

90. கூற்றுகளை ஆராய்க. (காந்தியடிகள்)

1. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதாது, அதனை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாக பிறருக்கு துன்பம் தராததாக இருக்க வேண்டும்.
2. வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது, தீயை தீயால் அணைக்க முற்படுவது போன்றது. வன்முறையை அன்பு, அருள் ஆகிய அறவழிகளில்தான் தடுக்க முடியும்
3. என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான். நான் ஒரு தேசபக்தன் அதற்கு அடிப்படைக் காரணம் நான் மனிதனாக இருப்பதும் அதற்கு மேல் மனிதாபிமானியாக இருப்பதும்தான்
4. உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதனாக இருந்தால், உலகமே ஒரு நல்ல சமுதாயமாக உருவாகும். தன்னாட்டு பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது.

(A) 1 தவறு 2 3 4 சரி

(B) 1 2 3 சரி 4 தவறு

(C) 1 2 சரி 3 4 தவறு

(D) அனைத்துமே சரி

(E) விடை தெரியவில்லை

91. எந்த நூற்றாண்டைத் தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்று கூறுவர்.

(A) 18

(B) 19

(C) 20

(D) 21

(E) விடை தெரியவில்லை

92. சொற்றொடரை ஒழுங்குபடுத்தி எழுதுக.

(A) கண்ணப்பன் வரலாறு கண்ணிடந் தப்பிய ஊனுக்கு ஊன்

(B) ஊனுக்கு ஊன் கண்ணப்பன் வரலாறு கண்ணிடந்தப்பிய

(C) கண்ணிடந் தப்பிய கண்ணப்பன் வரலாறு ஊனுக்கு ஊன்

(D) ஊனுக்கு ஊன் கண்ணிடந்தப்பிய கண்ணப்பன் வரலாறு

(E) விடை தெரியவில்லை

93. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.
   (A) செவொழியா - செலவு + ஒழியா
   (B) வழிக்கரை - வழி + கரை
   (C) வந்தணைந்த – வந்த + அணைந்த
   (D) எம்மருங்கும் - எ + மருங்கும்
   (E) விடை தெரியவில்லை

94. கீழ்க்காணும் கூற்றில் பெரியார் கூறாத ஒன்றைத் தேர்ந்தெடு.
   (A) ஒழுக்கமென்பதும், கற்பென்பதும், பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும்.
   (B) கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை.
   (C) தமிழ்நாட்டுப் பெண்கள் செக்குமாடாக இல்லாமல் பந்தயக் குதிரைகளாக மாற வேண்டும்.
   (D) சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு குழந்தை திருமணம்.
   (E) விடை தெரியவில்லை

95. கீழ்க்காணும் கூற்றில் கம்பரைப் பற்றி சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
   1. கம்பர் 2ம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர். இவரை திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் ஆதரித்தார்.
   2. தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை 1000 பாடல்களுக்கு ஒரு பாடல்பாடிச் சிறப்பித்துள்ளார்.
   3. கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகியன கம்பர் இயற்றிய நூல்கள்.
   4. யாமறிந்த புலவரிலேயே கம்பனைப்போல் என்று பாரதியார் பாடுகிறார்.
   (A) 2 சரி
   (B) 2 3 4 சரி
   (C) 1 2 3 சரி
   (D) அனைத்தும் சரி
   (E) விடை தெரியவில்லை

96. திருவள்ளுவர் தோன்றியிராவிட்டால் தமிழன் என்னும் ஓர் இனம் இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது – என்று கூறியவர் யார்.
   (A) கி.வா. ஜகந்நாதன்
   (B) மு.வரதராசனார்
   (C) கி.ஆ. பெ. விசுவநாதம்
   (D) திரு.வி.கல்யாணசுந்தரனார்
   (E) விடை தெரியவில்லை

97. பொருத்துக.

| | தெய்வம் | | நிலம் |
|---|---|---|---|
| a. | முருகன் | - | நெய்தல் |
| b. | திருமால் | - | குறிஞ்சி |
| c. | இந்திரன் | - | முல்லை |
| d. | வருணன் | - | மருதம் |

(A) 1 2 3 4
(B) 4 3 1 2
(C) 2 4 3 1
(D) 2 3 4 1
(E) விடை தெரியவில்லை

98. பொருத்துக.

a. பைங்கூழ் -1. ஈறுபோதல், தன்னொற்றிட்டல், உயிர்வரின் உக்குரல் மெய்விட்டோடும்
b. சிற்றோடை - 2. ஈறுபோதல், ஆதிநீடல், முன்நின்ற மெய் திரிதல்
c. சேதாம்பல் - 3. ஈறுபோதல், அடியகரம் ஐ ஆதல்
d. கருங்குயில் - 4. ஈறுபோதல், இனமிகல்

(A) 1 4 3 2
(B) 3 1 2 4
(C) 2 3 1 4
(D) 4 3 1 2
(E) விடை தெரியவில்லை

99. சொற்றொடரை ஒழுங்குபடுத்தி எழுதுக.

(A) கற்றவர்க்கே அமைந்த அரிய கலை நுண்ணிய நூல் பல.
(B) நூல் பல அமைந்த கற்றவர்க்கே நுண்ணிய அரிய கலை.
(C) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை.
(D) நுண்ணிய நூல் பல அமைந்த அரியகலை கற்றவர்க்கே.
(E) விடை தெரியவில்லை

100. பொருத்துக.

a. ஐகாரக்குறுக்கம் - 1. முஃடீது
b. ஔகாரக்குறுக்கம் - 2. தலைவன்
c. ஆய்தக்குறுக்கம் - 3. போன்ம்
d. மகரக்குறுக்கம் - 4. வௌவால்

(A) 2 4 1 3
(B) 4 2 3 1
(C) 3 4 2 1
(D) 1 2 3 4
(E) விடை தெரியவில்லை

******